www.newwisdomministries.com

கிறிஸ்துவே கடவுளிடமிருந்து நமக்கு வரும் ஞானம்

1கொரிந்தியர் 1:30

# ஞான ஒலி



## இணைய வார இதழ்

ஞானம் 5 - ஒலி 37 | 11-09-2022



# பிரபஞ்சப் பேராற்றலின் சிறுவடிவமே மனிதன்



# Mental Strength Builds Champions



அருட்பணி. சைமன் பீட்டர்

இயேசு கிறிஸ்துவில் பிரியமான எனதருமை சகோதர, சகோதரிகளே வணக்கம். இந்த வார இணைய இதழின் வழியாக உங்களைச் சந்திப்பதிலும், எனது ஒரு சில சிந்தனைகளை உங்களோடு பகிர்வதிலும் மற்றட்ட மகிழ்ச்சியடைகின்றேன்.

இது கலிகாலம், அதுவும் இது மிகவும் முத்திப் போச்சு என்ற விரக்தியான பேச்சுக்களை நாம் கேட்டிருப்போம். நாமும்கூட அது பற்றி அப்படித்தான் தோன்றுகிறது என்றும் சிந்தித்திருப்போம்.

ஒருகாலத்தில் உலகம் முழுவதும் நன்மையே நிறைந்திருந்தது. தீமை என்ற வாடையே இங்கு இருந்ததில்லை. பல காலத்திற்குப் பிறகு, ஆங்காங்கே தீமை தலைகாட்டியது. முக்காடு போட்டுக் கொண்டு வீதி ஓரமா பதுங்கிப் பதுங்கி நடமாடியது. அப்பத்தான் ஊருக்கு வெளியே, புதர்கள் அடர்ந்திருந்த காட்டுக்குள் சாராயம், கள் விற்றுக் கொண்டிருந்தார்கள். மதுப்பிரியர்களுக்கு மட்டுமே தெரிந்த அந்த இடங்களுக்குச் சென்று குடித்துவிட்டு ஊர் அடங்கிய பிறகு, குடித்தவர்கள், தலையில் முக்காடு போட்டுக்கொண்டு, வீதியில் ஜன நடமாட்டம் இல்லாத நேரத்தில், வேக வேகமாக நடந்து தங்கள் வீடுக்குள் ஓடிப்போவார்கள். அந்த சமயத்தில் குடித்தவர்கள் மிகவும் மோசமானவர்கள் என்று கருதினார்கள். அவர்கள் மிகவும் அவமானகரமாக நடத்தப்பட்டார்கள்.

அதன்பின் கொஞ்ச காலத்திற்குப் பின், நன்மையும், தீமையும் ஒன்றாக சகித்துக் கொண்டு வாழப் பழகிக் கொண்டன. தீமைகளை, தீயவர்களை சகித்துக் கொண்டார்கள். இந்தக் காலத்தில் இவையெல்லாம் தவர்க்கப்பட முடியாதது. புத்தி கூறுவதெல்லாம் அவமதிக்கபட்டது. பள்ளிகளில், நல்லொழுக்கப் பாடங்கள் தவர்க்கப்பட்டன. புத்துயுள்ளவன் பொழச்சுக்கட்டும். பெரியவர்கள், நமக்கேன் வம்பு என்று ஒதுங்க ஆரம்பித்தார்கள். தீமை, ஆரவாரத்தோடு நடுவீதியில் பவனிவர ஆரம்பித்தது. அப்பத்தான் துஷ்டனக் கண்டா தூல விலகு என்று, என்று நம்மை தலையில் அடித்துக் கொண்டு விலகிப்போக ஆரம்பித்தது. ஆங்காங்கே நம்மை பயந்து கொண்டு நடமாடியது.

அதன்பிறகு, தீமை பட்டவர்த்தனமாக நடைபெற ஆரம்பித்தது. வெட்கம், மானம் எல்லாம் அற்ற காலமாக மாறிவிட்டது. பண்பாட்டிலும், பாரம்பரியம், கலாச்சாரத்திலும் நம்பிக்கை கொண்ட சிறிய மக்களினம், எந்தவித கறைபடாது, நன்மையை விரும்பி. ஒழுக்கத்தோடு வாழ்கின்றது. ஆனால், நல்லதுக்குக் காலமில்லை, இப்படி இருந்தால்தான் பிழைக்க முடியும் என்ற சித்தாந்தம் வலுப்பெற்று, எங்கெங்கிலும், தீமை தலைவிரித்தாடிக் கொண்டிருக்கின்றது.

அனைத்தையும் எவ்வளவு சீக்கிரம் அனுபவிக்க முடியுமே அத்தனையையும் அனுபவித்துவிட வேண்டும். காற்றடிக்கும் போதே தூற்றிக் கொள்ள வேண்டும். வாய்ப்பு கிடைக்கின்றபோது பயன்படுத்திக் கொள்ள வேண்டும். கோழி குருடானாலும், சூப்பு நல்லா இருந்தாச் சரி. கொன்றால் பாவம், தின்றால் போச்சு. ஊரோடு ஒத்து போனாத்தான் நல்லது. அம்மணமா இருக்குற ஊர்ல கோமணம் கட்டிட்டு இருக்கிற ஒருத்தன் அங்கு வாழவே முடியாது. என்னடா அசிங்கமா கோவணமெல்லாம் கட்டிட்டு இருக்குற என்று கேவலமா பார்க்கும் உலகம் இவ்வுலகம்.

நல்லவர்களாக, ஒழுக்கத்தோடு வாழ்பவர்கள் கேலிக்குள்ளாக்கப்படுகின்றார்கள். அவர்களுக்கு வாழத் தெரியாதவர்கள் என்ற பட்டமும் கொடுக்கப்படுகின்றது.

உண்மை தலைவாருவதற்குள், பொய் ஊர், உலகமெல்லாம் சுற்றி வந்துவிடும் என்று சொல்வதன் பின் உள்ள மிகப்பெரிய ஆபத்தான செய்தி நம்மைக் கலங்க வைக்கின்றது.

என்னதான் இந்த உலகம் கலிகாலமா இருந்தாலும், நல்லதுக்கு காலமில்லன்னாலும், உண்மையும், நன்மையும் என்று அழிந்துபோகாது. இறுதி வெற்றி உண்மைக்கும், நன்மைக்கும்தான் என்ற பெரிய செய்தியை ஈஸ்டர் பெருவிழா, தீபாவளி, ஓனம் பண்டிகைகள் நமக்கு ஒவ்வொருவருடமும் நம்பிக்கை ஒளியூட்டுகின்றது. நல்ல விஷயம் உடனே புரியது, ஏற்றுக்கொள்ளப்படாது, ஆகவேதான் இவைகள் திரும்பத் திரும்ப சொல்லப்படுகின்றது. என்றென்றைக்காவது மனித குலத்திற்குப் புரியும் என்பதற்காக இவ்வாறு சொல்லப்பட நம் முன்னோர்கள் இந்த விழாக்கள் கொண்டாடப்பட அமைத்திருக்கின்றார்கள்.

ஆகவேதான் இயேசு பெருமான், தனது நற்சிந்தனைகளை வழங்கிய பிறகு கேட்கச் செவியுள்ளோர் கேட்கட்டும் என்று சொல்லிவிடுச் சென்றுள்ளார்.

தீதும் நன்றும் பிற தர வாரா.
அவனவன் வாழ்க்கை
அவனவன் கையிலே
அவனது நிந்தனையே
அவனாக மாறுகிறது

ஒருமுறை ஒரு வைர வியாபாரி ஓர் அரசனிடம் வந்து தன்னிடம் மிக உயர்ந்த வைர்க்கற்கள் உள்ளன. எங்குமே கிடைக்காத அபூர்வ வைரக் கற்கள் அவை என்று சொல்லி, அவற்றை வாங்கிக் கொள்ளுமாறு அரசனிடம் சொன்னான். அந்த அரசருக்கும் அந்தக் கற்களை வாங்க ஆசை. ஆனால, அவன் சொன்னதுபோல அந்த வைரக் கற்கள் உயர்ந்தவைகளா, அல்லாது போலியானவையா? என்று சோதிக்கப் பார்த்தான். அரசவையிலிருந்த அனைவருமே அவை உண்மையான வைரக் கற்கள்தான் என்று சொன்னார்கள். இருந்தாலும் அரசரின் சந்தேகம் தீரவேயில்லை.

இந்தக் வைரக் கற்களை சோதித்து அவற்றின் உண்மைத் தன்மையைக் கண்டுபிடிக்கின்ற–வர்களுக்கு தக்க சன்மானம் தரப்படும் என்று நாட்டில் அறிவித்தார்கள். அதைக் கேட்ட ஒரு பார்வையற்ற முதியவர் அரசனிடம் வந்து, அந்தக் வைரக் கற்கள் உண்மையா, போலியா என்று நான் சொல்லுகின்றேன் என்று சொன்னார். அப்போது அரசன் அந்த வைரக் கற்களை அந்த முதியவரிடம் கொடு என்று வைர வியாபாரியிடம் கூறினார். அவனும் கொடுத்தான். அந்த முதியவர், அந்த வைரக் கற்களை எடுத்துக் கொண்டு அந்த முதியவர் அரண்மனைக்கு வெளியே சென்று, தரையில் ஒரு துணியை விரித்து, அந்த வைரக் கற்களை அதன்மீது பரப்பி வைத்தார். வெளியே நல்ல வெயில் அடித்தது. அந்த வெயிலில் அந்தக் கற்களை ஒரு பத்து நிமிடம் காய வைத்தார். அதன்பிறகு ஒவ்வொரு கல்லையும் எடுத்து தொட்டுப் பார்த்து சிலவற்றை தனது வலப்புறத்திலும், பலவற்று தனது இடப்புறத்திலும் வைத்தார். அதன்படி வலப்புறத்தில் ஒரு 40 கற்களை இருந்தன. இடப்புறத்தில் ஒரு 60 கற்களை இருந்தன. அப்போது அந்த முதியவர், அரசே எனது வலப்புறத்தில் உள்ள 40 கற்கள் மட்டுமே, உண்மையான தரமான வைக் கற்கள். ஆனால் எனது இடப்புறத்தில் உள்ள 60 கற்களும் போலியானவை என்று சொன்ன உடனே, அந்த வைர வியாபாரி, அரசனின் காலில் விழுந்து, அரசே, அவர் சொல்வது உண்மைதான் என்னை மன்னித்து விடுங்கள் எனக்கு எந்த காசும் வேண்டாம். அந்த வைரங்கள் அனைத்தையும் நீங்களே வைத்துக் கொள்ளுங்கள் என்று சொன்னான்.

அரசன் அந்த முதியவரிடம், இந்த 40 வைரக் கற்கள்தான் உண்மையானவை என்று எப்படி கண்டுபிடித்தீர்கள் என்று கேட்டார். அதற்கு அந்த பார்வையற்ற முதியவர்,

அரசே, வைரக் கற்கள் வெயிலில் போட்டாலும், சூரிய வெளிச்சத்தை அந்தக் கற்களு பிரதிபலிப்பதால் அவைகள் அவ்வளவு சூடாகாது. மாறாக, மற்ற கற்கள் வைரத்தைப் போன்று தோன்றினாலும், அவைகள் அனைத்தும் கண்ணாடிக் கற்கள். அவை வெயிலில் போட்டால், அவைகள் சூடேறி, நன்றாக சுடும்.

அதனால்தான் சூடான கற்கள், கண்ணாடியிலான போலிக் கற்கள் என்றும், சூடாகதவை உண்மையான வைரக் கற்கள் என்று அறிந்து கொண்டேன் என்றாராம்.

அரசன் அவரைப் பாராட்டி அந்த வைரக் கற்கள் அனைத்தையும் அந்த பார்வையற்ற முதியவருக்கே கொடுத்து அனுப்பினார்.

உண்மையான வைரம், கடினமானது, வெயிலின் சூடும் அதனைப் பாதிக்காது. அதனை வெட்டுவதும் கடினம். மிகவும் விலைமதிப்பற்றது.

அந்த வைரக்கற்களைப் போன்றுதான். நல்லவர்களும், பக்குவப்பட்டவர்களும் இருப்பார்கள். அவர்களை எந்தக் கலிகாலமும் பாதிக்காது. எத்தகைய சமூக அவலமும், கேடுகெட்ட கலாச்சாரமும் அவர்களின் உறுதியைக் கெடுக்காது.

உண்மையானவர்களும், நல்லவர்களும் எப்போதும் நிதானமாக, கலங்காது இருப்பார்கள்.



# விவிலியம் அறிவோம் – 55



அருட்பணி. ஆ. அலெக்ஸ் CMF

## மோசேயின் பிறப்பும் வளர்ச்சியும்

விடுதலைப் பயணம் நூல் 2 வது பிரிவு மோசேயின் பிறப்பும் வளர்ச்சியும் பற்றிப் பேசுகிறது. மோசே கொல்லப்படாமல் பாதுகாக்கப்படுவதற்கு பெண்களின் பங்கையும் இப்பிரிவு வெளிப்படுத்துகிறது. பார்வோன் மன்னன் இஸ்ரயேல் மக்களின் எண்ணிக்கைப் பலுகிப் பெருகுவதைக் கண்டு அஞ்சுகிறான். அவர்களால் நாட்டிற்கு ஆபத்து வந்துவிடலாம் எனக் கருதுகிறான். எனவே அவர்களின் எண்ணிக்கையைக் குறைப்பதற்காக பல முயற்சிகளைக் கையாளுகின்றான். முதலில் அவர்கள் கடினமான வேலைகளைச் செய்யக் கட்டாயப்படுத்துகிறான். தன்னுடைய கட்டடப் பணிகளுக்காக அவர்களை அடிமைகளாகப் பயன்படுத்துகிறான. அடிமைத்தனமும், கடின வேலைகளும் இஸ்ரயேல் மக்களின் எண்ணிக்கையைக் குறைக்கவில்லை; மாறாகப் பலுகிப் பெருகச் செய்கின்றன. இரண்டாவதாக, எகிப்தின் மருத்துவப் பெண்கள் வழியாக இஸ்ரயேல் பெண்களுக்குப் பிறக்கும் ஆண்குழந்தைகளைக் கொல்ல முயற்சிக்கிறான். அதுவும் பலனளிக்கவில்லை. எகிப்தின் மருத்துவப் பெண்கள் கடவுளுக்கு அஞ்சியதால் பார்வோனுக்குக் கீழ்ப்படிய மறுக்கிறார்கள். அதைத் தொடர்ந்து பார்வோன் மூன்றாவதாக ஒரு கொடிய திட்டத்தை அறிமுகப்படுத்துகிறான். இஸ்ரயேல் பெண்களுக்குப் பிறக்கும் ஆண் மகவுகளை நைல் நதியில் எறிந்து கொல்லவேண்டும் எனக் கட்டளையிடுகிறான். ஆண்களின் எண்ணிக்கைக் குறைந்துவிட்டால் அவர்கள் பலுகிப் பெருகுவதற்கு வாய்ப்பில்லை என நினைக்கிறான். இந்தச் சூழ்நிலையில்தான் கடவுள் மோசே என்ற ஒரு குழந்தையைக் காப்பாற்றி இஸ்ரயேல் மக்களை எகிப்திலிருந்து விடுவிப்பதற்காக தயாரிக்கிறார்.

இஸ்ரயேல் மக்களுக்கு விடுதலைப் பெற்றுத் தருவதில் முக்கியப் பங்கு வகித்த மோசேயைக் காப்பாற்றி முறையாக வளர்வதற்கு வகை செய்வதில் பெண்களின் பங்கு முக்கியமானது. அவர்களில்



முதன்மையானவர் மோசேயின் தாய் யோக்கபேது (விப 6:20). மோசே பிறந்த போது அவர் குழந்தை, அழகாயிருந்தது என்று கண்டாள்; மூன்று மாதங்களாக அதனை மறைத்து வைத்திருந்தாள் என வாசிக்கிறோம். ஆண்மகவுகளை நைல் நதியில் எறிந்து கொல்லவேண்டும் என்ற கட்டளைக்கு எதிராக யோக்கபேது குழந்தையை மறைத்து வைக்கின்றாள். சட்டப்படி அவளின் செயல் ஒரு குற்றச்செயல். மூன்று மாதங்கள் கடந்தபின் குழந்தையை மறைத்து வைக்க முடியாததால் இன்னொரு செயலைச் செய்கிறாள்: கோரைப்புல்லால் பேழை ஒன்று செய்து அதன்மீது நிலக்கீல், கீல் இவற்றைப் பூசினாள்; குழந்தையை அதனுள் வைத்து நைல்நதிக் கரையிலுள்ள நாணல்களுக்கிடையில் விட்டுவைக்கிறாள். மோசேயின் தாய் துணிச்சலுடன் செயல்படுகிறாள் என்பதை மறுப்பதற்கில்லை. பார்வோனின் கட்டளைக்கு அவள் கீழ்ப்படியவில்லை. குழந்தை மறைத்துவைக்கப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டால் குழந்தையோடு சேர்த்து அவளும் கொல்லப்படலாம். அதைப் பற்றியெல்லாம் அவள் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. குழந்தையைக் காக்கவேண்டும் என்பதுதான் அவளது கவலையாக உள்ளது. குழந்தையை ஒரு பேழையில் வைத்து மறைத்துவைக்கிறாள். இங்கே பயன்படுத்தப்படும் பேழை என்ற சொல்லுக்கு எபிரேய மொழியில் டெபா (வநடிய) என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. விவிலியத்தில்



இச்சொல் இன்னும் ஒரேயொரு இடத்தில், தொநூ 6:4 இல் வருகிறது. தொநூ 6:4 இல் இச்சொல் நோவா தன்னையும் தன் குடும்பத்தினரையும் வெள்ளப்பெருக்கினின்று காத்துக்கொள்வதற்காக கட்டிய பேழையைக் குறிப்பதற்கு பயன்படுத்தப்பட்டுள்ளது. நோவாவின் பேழையைப் போல குழந்தை மோசேயை மறைத்துவைத்த பேழையும் அச்சம் தருகின்ற வெள்ளத்தில் மிதக்கிறது. நோவாவும் அவரது குடும்பமும் காப்பாற்றப்பட்டதுபோல மோசேயும் காப்பாற்றப்படுகிறார்.

மோசேயைக் காப்பாற்றுவதில் முக்கியப் பங்காற்றுகின்ற இரண்டாவது பெண், மோசேயின் மூத்த சகோதரி. அவருடைய பெயர் இப்பகுதியில் குறிப்பிடப்படவில்லை. ஆனால் பின்னால் வருகின்ற நிகழ்வுகளின் வழியாக அவருடைய பெயர் மிரியம் என அறியவருகிறோம். இஸ்ரயேல் மக்கள் எகிப்தை விட்டு வெளியேறியபின், செங்கடலைக் கடக்கும் நிகழ்வில் பெண்களை ஒன்று திரட்டி கடவுளைப் போற்றிப் பாடுபவராக மிரியம் வருகிறார் (விப 15:20-21). நைல்நதிக் கரையிலுள்ள நாணல்களுக்கிடையில் பேழையில் விட்டுவைத்த குழந்தை மோசேயை கண்காணிக்கும் பொறுப்பை மிரியம் செய்கின்றார். மிரியம் மோசேயின் மூத்த சகோதரியாக இருந்தாலும் அவள் அப்போது சிறுமியாகத்தான் இருக்கவேண்டும். பேழையில் மறைத்து வைக்கப்பட்டுள்ள தனது சகோதரனுக்கு என்ன நடக்கிறது என்பதைக் கண்காணிப்பதற்காக மிரியம் தூரத்தில் நின்று கொண்டிருக்கிறாள். விப 2:5 இல் இன்னொரு பெண்மணி அறிமுகப்படுத்தப்படுகிறாள். அவர் பார்வோனின் மகள். தனது தோழிகளுடன் நீராடுவதற்காக அவர் நைல் நதிக்கு வருகின்றார். அங்கே அவர் உலாவுகையில் நாணல்களுக்கிடையே மறைத்து வைக்கப்பட்டிருந்த பேழையைக் காண்கின்றார். தனது தோழியரிடம் கூறி அந்தப் பேழையை எடுத்துவரப் பணிக்கின்றார். அவர்களும் பேழையைக் கொண்டுவருகின்றனர். பேழையைத் திறந்தபோது அதில் ஒரு குழந்தை அழுதுகொண்டிருக்கிறது. குழந்தையின் மேல் அவர் இரக்கம் கொள்கிறார். பேழையில் மறைத்துவைக்கப்பட்டிருக்கும் குழந்தை ஒரு எபிரேயக் குழந்தையாக இருக்கவேண்டும் என்பதை அவர் அறிந்தவராகவே உள்ளார். தனது தந்தையின் கட்டளைகளுக்குப் பயந்து இந்த குழந்தையை பேழையில் நாணல்களுக்கிடையில் மறைத்து வைத்திருக்கவேண்டும் என அவர் நம்புகின்றார். குழந்தையின் மீது அவருக்கு ஏற்பட்ட பரிவு தந்தையின் கட்டளைகளுக்கு எதிராக அவரைச் செயல்பட வைக்கிறது. அவர் அந்தக் குழந்தையை எடுத்து தானே வளர்ப்பதற்கு முடிவெடுக்கிறார். குழந்தையைக் கண்காணிப்பதற்காகத் தூரத்தில் நின்றுகொண்டிருந்த குழந்தையின் சகோதரி அங்கு நடப்பதையெல்லாம் காண்கிறார். குழந்தையை பார்வோனின் மகள் கனிவுடன் எடுத்ததைக் கண்டதும், அவள் அந்தக் குழந்தையை வளர்ப்பதற்கு முடிவெடுத்ததை யூகித்துக் கொள்கிறாள். அவள் இப்போது விரைவாகச் செயல்படவேண்டும்; குழந்தை நலமுடன் வளர்வதற்கு உதவவேண்டும். எனவே பார்வோனின் மகளை அணுகி, உமக்குப் பதிலாகப் பாலூட்டி இக்குழந்தையை வளர்க்க, எபிரேயச் செவிலி ஒருத்தியை நான் சென்று அழைத்து வரட்டுமா? எனக் கேட்கின்றாள். பேழையில் இருக்கும் குழந்தை எபிரேயக் குழந்தை என்று அறிந்தபிறகு அதைக் கவனிக்க எபிரேயச் செவிலி இருப்பதுதான் நல்லது என அவர் நினைத்திருக்கவேண்டும். எனவே பார்வோனின் மகள் அச்சிறுமியிடம், சரி. சென்று வா எனக் கூறி அனுமதி அளிக்கின்றார். சிறுமியும் சென்று குழந்தையின் தாயையே கூட்டி வருகின்றாள். பார்வோனின் மகள் அவளை நோக்கி, இந்தக் குழந்தையை நீ எடுத்துச் செல். எனக்குப் பதிலாக நீ பாலூட்டி அதனை வளர்த்திடு. உனக்குக் கூலி கொடுப்பேன் எனக் கூறி குழந்தையின் தாயிடமே குழந்தையை ஒப்படைக்கின்றாள். குழந்தையை மறைத்துவைக்க முடியாததால் நாணல்களுக்கிடையில் பேழையில் குழந்தையை வைத்தாள் தாய்; இப்போது அந்தத் தாயின் பொறுப்பிலேயே வளர்வதற்கு குழந்தை அவளிடமே வருகிறது. இனி அவள் குழந்தையை மறைத்துவைக்கத் தேவையில்லை. வெளிப்படையாகவே குழந்தையை வளர்க்கலாம். அவளும் குழந்தையை எடுத்துச் சென்று பாலூட்டி வளர்க்கின்றாள். நாள்கள் நகர்கின்றன. குழந்தை வளர்கிறது. தாய் அவனை பார்வோனின் மகளிடம் கொண்டுபோய் விடுகின்றாள். பார்வோனின் மகள் அக்குழந்தையைத் தன்னுடைய மகனாகத் தத்தெடுக்கின்றாள். நீரிலிருந்து நான் இவனை எடுத்தேன் என்று கூறி அவள் அவனுக்கு மோசே என்று பெயரிட்டாள் என விடுதலைப் பயணம் நூல் பதிவு செய்கிறது.


மோசேயின் பிறப்பும் அவர் குழந்தையாயிருந்தபோது காப்பாற்றப்படுதலும் பண்டைய மேற்காசிய இலக்கியத்தில் காணப்படும் ஒரு புகழ்பெற்ற கதையை ஒத்ததாக உள்ளது. அந்தக் கதை அக்காதிய மன்னன் சார்கோனின் பிறப்புக் கதை. கி.மு. 24 வது நூற்றாண்டில் அக்காதிய மன்னனான சார்கோன் ஆட்சி புரிந்தான். சார்கோனின் தாய் ஒரு கோவிலில் குருவாக பணிபுரிந்தவள். குருவாகப் பணிபுரியும் ஒரு பெண் குழந்தைப் பெற்றுக்கொள்வதற்கு அனுமதி இல்லை. குழந்தைப் பெற்றுக்கொண்டால் அந்தக் குழந்தையை அவள் பணிபுரியும் தெய்வத்திற்குப் பலியாக ஒப்புக்கொடுக்கவேண்டும். சார்கோனின் தாய் கருத்தரித்து ஒரு குழந்தையைப் பெற்றெடுக்கிறாள். அந்தக் குழந்தையைப் பலிகொடுப்பதற்கு அவர் விரும்பவில்லை; ஆனால் அந்தக் குழந்தையை அவரால் வளர்க்கவும் முடியாத நிலை. எனவே கோரைப்புல்லால் செய்யப்பட்ட ஒரு பேழையில் குழந்தையை வைத்து யூப்பிரட்டிஸ் ஆற்றில் விட்டுவிடுகிறார். ஆற்றிலே மிதந்துவந்த பேழையில் இருந்த குழந்தையை தண்ணீர் இறைத்துக்கொண்டிருந்த அக்கி என்பவர் எடுத்து வளர்க்கின்றார். அந்தக் குழந்தையை தனது மகனாகத் தத்தெடுக்கின்றார். பிற்காலத்தில் அவர் ஒரு அரசராக மாறுகின்றார். அரசனான சார்கோனுடைய கதைக்கும் மோசேயின் கதைக்கும் இருக்கின்ற ஒற்றுமைகள் பிரமிக்கத்தக்கவை. இந்தக் கதைகளில் வருகின்ற ஒரு முக்கியமான வேற்றுமை என்னவென்றால் சார்கோன் ஒரு சாதாரண தண்ணீர் இறைக்கும் ஒருவரால் காப்பாற்றப்பட்டு வளர்கின்றார். ஆனால் மோசே பார்வோனின் மகளால் காப்பாற்றப்பட்டு, அரண்மனையில் வளர்கின்றார். இன்னும் மோசேயின் கதையில் கடவுள் பெண்களைப் பயன்படுத்தி மோசேயைக் காக்கின்றார்.

பார்வோனின் வீட்டில், பார்வோனின் மகளுடைய மகனாக மோசே வளர்கின்றார். மோசே வளர்ந்தபின் நாட்டு நடப்புகளை அறிந்தகொள்வதற்காக வெளியே செல்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார். அவ்வாறு செல்கின்றபோது ஒரு நாள் இஸ்ரயேல் மக்கள் வாழும் பகுதிக்குச் செல்கின்றார். அவர்களின் துன்பங்களைக் காண்கின்றார். பார்வோனின் அடிமைகளாக கொடிய பணிகளுக்கு அவர்கள் ஆளாக்கப்படுவதைப் பார்க்கின்றார். அவரது மனம் இளகுகிறது. மோசே பார்வோனின் அரண்மனையில் வாழ்ந்தாலும் தான் இஸ்ரயேல் இனத்தைச் சார்ந்தவன் என்பதை அறிந்தவராகவே இருந்தார். கடவுளின் திட்டத்தை மோசே நிறைவேற்றுவதற்கு இந்த அறிவு மிக முக்கியமானது. இஸ்ரயேல் இனத்தவர் நடுவில் மோசே வந்தபோது இஸ்ரயேல் இனத்தைச் சார்ந்த ஒருவனும் எகிப்தியன் ஒருவனும் சண்டையிடுவதைக் காண்கின்றார். மோசேயின் இனப்பற்று அவரைத் தூண்டி அந்த எகிப்தியனைக் கொல்லவைக்கிறது. அந்த எகிப்தியனை அடித்துக் கொன்று மணலுக்குள் புதைத்துவிடுகின்றார். தான் செய்த செயலை யாரும் காணவில்லை என அவர் நினைக்கின்றார். எனவே விளைவுகளைப் பற்றிச் சிறிதும் அவர் சிந்திக்கவில்லை. இந்நிகழ்வைப் பதிவுசெய்யும் ஆசிரியரும் அவர் செய்தது சரியா? அல்லது தவறா? என்பதைப் பற்றி எதுவும் எழுதவில்லை.

இந்த நிகழ்விற்குப் பின் அடுத்த நாளும் மோசே இஸ்ரயேல் இனத்தவர் வாழும் பகுதிக்கு வருகின்றார். அங்கே இஸ்ரயேலர் இருவருக்கிடையே சண்டை நடந்து கொண்டிருப்பதைக் காண்கின்றார். ஒரே இனத்தைச் சார்ந்தவர்கள் சண்டையிட்டுக் கொள்வதை மோசே விரும்பவில்லை. எனவே அந்த இருவரில் குற்றம் செய்தவனைக் கண்டிக்கின்றார். உன் இனத்தவனை ஏன் அடிக்கிறாய்? என அவனைப் பார்த்துக் கேட்கின்றார். இஸ்ரயேல் மக்களுக்கு விடுதலைப் பெற்றுத் தருவதற்காக கடவுளால் தேர்ந்தெடுக்கப்பட்டவர் மோசே. எனவே இஸ்ரயேல் மக்களிடத்தில் அவர் உரிமை பாராட்டுவதில் தவறில்லை. ஆனால் அவர்கள் அவரை ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்கள். குற்றம் செய்தவன் மோசேயை நோக்கி, எங்கள்மேல் உன்னைத் தலைவனாகவும் நடுவனாகவும் நியமித்தவன் எவன்? எனக் கேட்கின்றான். மோசே இஸ்ரயேல் இனத்தவராக இருந்தாலும் பார்வோனின் அரண்மனையில்; வளர்பவர். இஸ்ரயேல் மக்களுக்கும் அது நிச்சயமாக தெரிந்திருக்கவேண்டும். எனவேதான் அவன் இந்தக் கேள்வியைக் கேட்கின்றான்.

அந்த கேள்வியுடன் நிறுத்தியிருந்தால் பரவாயில்லை. அவன் தொடர்ந்து, எகிப்தியனைக் கொன்றதுபோல் என்னையும் கொல்லவா நீ இப்படிப் பேசுகிறாய்? எனக் கூறுகின்றான். மோசே எகிப்தியனைக் கொன்றது யாருக்கும் தெரியாது என நினைத்திருந்தார். ஆனால் அது மக்களுக்குத் தெரிந்திருக்கிறது. இந்த இஸ்ரயேலன் கேட்ட கேள்வியில் அது உறுதியாகிவிட்டது. மோசேயை அச்சம் தொற்றிக்கொள்கிறது. இந்தச் செய்தி பார்வோனையும் எட்டுகிறது. பார்வோன் மோசேயைக் கொல்லத் தேடுகிறான். மோசே எகிப்தில் வாழ்வது இனி முடியாத ஒன்று. எனவே மோசே அங்கிருந்து தப்பியோடுகின்றார். பக்கத்து நாடான மிதியான் நாட்டிற்குச் சென்று அங்கே குடியிருக்கின்றார். மோசே மிதியானில் என்ன செய்தார் என்பதை அடுத்த வாரம் பார்ப்போம்.

பயணம் தொடரும்...



# ஞாயிறு மறையுரை


## பொதுக்காலம் 24-ம் ஞாயிறு

11-09-2022

முதல் வாசகம் – விடுதலை பயணம் 32:7-11, 13-14
இரண்டாம் வாசகம் – 1 தீமொத்தேயு 1:12-17
நற்செய்தி வாசகம் – லூக்கா 15:1-32


மறையுரை வழங்குபவர்

அருட்பணி. **ஸ்டீபன் கஸ்பார்**
பங்குத்தந்தை
திருமுழுக்கு அருளப்பர் ஆலயம்
காமலாபுரம், திண்டுக்கல் மறைமாவட்டம்

## மனம் வருந்து, மன்னிக்கப்படுவாய்
## மனம் திரும்பு மகிழ்ச்சி கொள்வாள்

இறை இயேசுவிலே எனக்கு மிகவும் பிரியமான சகோதர, சகோதரிகளே, திரைப்படப் பாடல் ஒன்று

தப்பு செஞ்சவன் வருந்தியாகனும்
தவறு செஞ்சவன் திருந்தியாகனும்... என்கிறது

ஆம் அன்பான இறைச் சமூகமே. மனித உடல் கொண்ட யாவருமே. புனிதர்களில்லை. மாறாக குறை இயல்பு கொண்டவர்களே. ஆம் தவறு செய்யாத மனிதர்களே இல்லை. தவறு செய்த மனிதனுக்குத் திரும்பிவர, திருந்தி வாழப் பல வாய்ப்புகளைக் கடவுள் தருகிறார். திருந்தி வரும் மனிதன் தன் வாழ்வில் மனிதத்தைப் புனிதமாக்கி மகிழ்ச்சியை இரட்டிப்பாய்ப் பெறுகிறான் என்பதை இன்றைய நற்செய்தி தெளிவாய் நமக்குத் தருகிறது.

தவறு செய்த அசோக மன்னன் மனம் திருந்தவில்லையா? வேதத்திலே மறுதலித்துத் தவறு செய்த பேதுரு மனம் திருந்தவில்லையா? புனித அகஸ்டின், கடந்த மாதப் புனிதர், மனம் திருந்தி மறைவல்லுநராக, புனிதராக மாறவில்லையா? மாறுவதற்கு மனம் வேண்டும். திருந்துவதற்கு, திடம் கொண்ட தியாக உள்ளம் வேண்டும். திருந்திவர, வாழ்வைத் திருப்பிப் பார்த்து, அதை திருப்பிப் போடத் திடமான மனம் வேண்டும்.

இன்றைய நற்செய்தியின் முதல் பகுதியில் நம் ஆண்டவர் இயேசு, மனம் மாறத் தேவையில்லாத தொண்ணூற்றுத்தொன்பது நேர்மையாளர்களைக் குறித்து உண்டாகும் மகிழ்ச்சியைவிட, மனம் மாறிய ஒரு பாவியைக் குறித்து விண்ணகத்திலே மகுதியான மகிழ்ச்சி உண்டாகுமென்கிறார். (லூக்கா 15:4)

இரண்டாவது பகுதியிலே ஊதாரி மைந்தனின் உவமை வாயிலாக தவறு செய்தவர் வருந்தி, திருத்தி, திருந்தி மன்னிப்புக் கோறுதல் மற்றும் திருந்தி வருபவரை, திருப்பி அடிக்காது வாய்ப்புக் கொடுத்து வரவேற்பதும், மன்னித்து ஏற்பதும், மனித மாண்பு என்பதை விளக்கி எடுத்துரைக்கிறார் இயேசு. இங்கே இயேசு, நம்மை மனம் திருப்புவதா? மன்னித்து ஏற்பதா? இதில் எது பெரியது? எது உயர்ந்த பண்பு. மனிதத்திற்க எது தேவை என உணர்த்தும் பாடத்தை இந்த உவமையில் விளக்குகிறார்.

கண்ணதாசன் கூற்றுப்படி தப்பு செய்தவன் வருந்தியாகனும் என்பது படம் பிடித்துக் காட்டப்படுகிறது. இளைய மகன் தன் தந்தையின் அன்பைப் புறக்கணித்தான், தன் சொத்தைப் பிரித்து வாங்கிக் கொண்டு கண்காணா இடம் சென்று, கயவர் கூட்டத்தில் கலந்து கொண்டு, கணக்கற்ற பாவத்திற்கு உட்பட்டு கரைத்துவிட்டான். தந்தையிடம் பெற்ற சொத்தை, உணவை இழந்து, உறவுகளை இழந்து உருக்குலைந்தான். தவறை உணர்ந்தான். மனம் வருந்தினான். தந்தையின் அன்பை நினைக்கிறான். மனம் திடம் கொண்டு எழுந்து, தந்தையிடம் திரும்பிச் செல்ல முயற்சி எடுத்து சென்று, தந்தையே நான் வருந்துகிறேன். உம் மகனென அழைக்கப்பட தகுதியற்றுவிட்டேன். உம் வேலைக்காரருள் ஒருவராக என்னை ஏற்று ஆதரியுங்கள். நான் வாழ வழி செய்யுங்களென வரம் கேட்பேன் என்று மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு, தன் தந்தையிடம் ஊதாரி மைந்தன் ஓடிச் சென்று, காலைப் பற்றிக்கொண்டு மனம்விட்டுப் பேசிக் கதறி அழுது மன்னிப்பு கேட்கிறான். இங்கே ஏழு அருட்சாதனங்களில் ஒன்றான ஒப்புரவு நடக்கிறது. எப்படி?

ஊதாரி தவறை நினைத்தான், மனம் வருந்தி தந்தையின் அன்பை எண்ணினான். மனம் திருந்தி மன்னிப்புக் கேட்டான். வருத்தப்பட்டு வந்த, வாழ்வை இழந்த இளைய மகனுக்கு (ஊதாரி மகனுக்கு) மறுக்க முடியாத, மறக்க முடியாத மன்னிப்பை வழங்கி, அவனை மகிழ்ச்சியால் நிரப்பி அவரும் மகிழுகிறார். ஆனந்தக் கண்ணீர் வடிக்கிறார் அவனுடைய தந்தை.

மனம் திரும்பும் பாவியைக் குறித்து விண்ணுலகில் உண்டாகும் மகிழ்ச்சியை, இம் மண்ணுலகில் இந்த உவமையின் வழியாய் இயேசு லூக்கா 15:4ல் நிகழ்த்திக் காட்டிப் பாடம் கற்பிக்கிறார்.

இங்கு நம் வாழ்வை இந்த நற்செய்தியோடு உரசிப் பார்ப்போம் இன்று? நம்மிலே பலர் நம்மை புனிதர்களென்று சொல்லிக் கொண்டு, உத்தமரென்று உலகுக்கு படம் காட்டிக் கொண்டு, தவறுக்குமேல் தவறு செய்து தரம் கெட்ட வாழ்க்கை வாழ்ந்து நரகத்தை நோக்கிப் பயணித்துக்கொண்டு வருகிறோம். நரகம் கடவுளைக் காணமுடியாத, அழியாத நெருப்புள்ள இடம். நம்மைக் கடவுள் படைத்ததே அவரை அறிந்து, அன்பு செய்து, அவரை அனுபவித்து, அறிக்கையிட்டு, இவ்வுலகைவிட்டுப் பிரிந்து, அவரோடு விண்ணுலகிலே வாழ்வதற்காகத்தான். ஆம் விண்ணகமே நம் தாய்நாடு எனப்பவுலடிகள் பிலிப்பியர் 3:20ல் சொல்லுகிறார்.

விண்ணுலகம் நமதாக நம் மண்ணக வாழ்வில் விண்ணகத்தைக் கட்ட முயலுவோம்.பிறரன்பை பேணி வளர்த்து மனிதத்தை, மனித நேயத்தைக் கட்டிக் காப்போம். நம் தவற்றை உணருவோம். தவறுக்காய் மனம் வருந்தி. திருந்தி திரும்பி வருவோம். புனிதத்தை நோக்கி பயணித்து, பிறர் குற்றம் மன்னிப்போம். அவர்களின் மகிழ்ச்சியை இரட்டிப்பாக்கி நாமும் மகிழுவோம். அப்படிப்பட்ட சகோதரத்திலே இங்கே வாழும்பொழுது நாம் விண்ணகத்தை மண்ணகத்திலே நிலைநாட்டுகிறோம். நீதி, உண்மை, அன்பு, மகிழ்ச்சி, சமத்துவம், சகோதரத்துவம் மிளிர்ந்த சமதர்ம சமுதாயம் படைக்கிறோம். இறை ஆட்சி மிளிரும். இறைவன் நம்மோடு இருப்பார். அல்லேலூயா பாடுவோம்.

ஆமென்.





# பொதுக்காலத்தின் 24-ம் ஞாயிறு

விப. 32:7-11, 13-14, 1 தீமோ. 1 : 12-17. லூக். 15:1-32

**11-09-2022**




**பா. சேவியர்**
பட்டாபிராம், சென்னை.


## திருப்பலி முன்னுரை

நான் ஒரு பாவி என்பதை உணர்ந்து, மனம் வருந்தி, கடவுள் பக்கம் திரும்பி, வந்து அவரது அன்பின் மக்களாக வாழும் உரிமைப் பேற்றைத் திரும்ப பெற வருகை புரிந்துள்ள அன்பு இறை மக்களே உங்கள் அனைவரையும் பொதுக்காலத்தின் 24-ஆம் ஞாயிறு வழிபாட்டிற்கு அன்புடன் வரவேற்கிறேன்.

ஆண்டவர் அன்பும் அருளும் இரக்கமும் மிகுந்தவர். சினம் கொள்ள தாமதிப்பவர். சாந்தமுடையவர் என்ற உண்மைக்குச் சான்று பகர்வதோடு நாம் நம் பாவச்சுமையால் அழுத்தப்பட்டு அவநம்பிக்கைக்கு ஆளாகத் தேவையில்லை என்ற பாடத்தையும் கற்றுத் தருகிறது இன்றைய வழிபாடு.

எவ்வளவு பெரிய பாவியாய் இருந்தாலும் அதற்காக வருந்தித் திருந்தி வானகத் தந்தையிடம் திரும்பி வருபவரை அவர் முழுமையாகத் தூய்மைப்படுத்தி தன் மகனுக்குரிய அந்தஸ்தை மீண்டும் தருவார் என்ற கருத்தை முன்னிருத்தி கடவுளின் அன்பையும், இரக்கத்தையும் படம் பிடித்துக் காட்டுகிறது இன்றைய இறை வார்த்தை வழிபாடு.

நீ காணாமல் போன ஆடாக இருந்தாலும், நீ காணாமல் போன காசாக இருந்தாலும், நீ காணாமல்போன ஊதாரி மகனாக இருந்தாலும் நான் உன்னைக் கைவிட மாட்டேன். என்னிடம் என் பரம தந்தை ஒப்படைத்த எதையும் நான் இழக்க மாட்டேன். ஆகவே உணர்ந்து திருந்தி திரும்பி வா, நான் உனக்காக காத்திருக்கிறேன் என்று இன்றைய வழிபாட்டின் வழியாக இறைமகன் இயேசு நம்மை அழைக்கிறார்.

பலவீனத்தால் பாவத்தில் தவறி விழுந்தாலும், இரக்கத்தின் ஊற்றாகிய இறைவனிடம் மன்றாடுவோம். அவர் மன்னிப்பதில் வல்லவர் என்பதை உணர்ந்து அவரை நம்பிக்கையுடன் நாடி வருவோம்.

நாம் நமது பாவங்களை அறிக்கையிட்டு மனம் திருந்தி வரும்போது நம்மை வரவேற்க இயேசு காத்திருக்கிறார். நாம் அவரை அணுகி வர, அவரது அரவணைப்பில் ஆறுதல் பெற இத்திருப்பலியில் நம்பிக்கையுடன் இணைவோம்.

## முதல் வாசக முன்னுரை

கடவுளை சினம் கொண்டவராக சித்தரித்தாலும் அவரின் இரக்கத்தையும், பரிவையும் நிலைநிறுத்துகிறது இன்றைய முதல் வாசகம். மனிதரை அழிப்பதல்ல மாறாக அவர்களை வாழ வைப்பதே கடவுளின் திட்டம் என்பதையும், விசுவாசத்துடன் கூடிய உருக்கமான தொடர் வேண்டுதல் மூலம் கடவுளின் சினத்தை தணிக்க முடியும் என்பதையும் விளக்கும் இவ்வாசகத்தை நம்பிக்கையுடன் கேட்போம்.

## இரண்டாம் வாசக முன்னுரை

தவறு செய்தவர்களை குறிப்பாக திருஅவையையே கூண்டோடு அழிக்க நினைத்த பாவிகளுள் முதன்மைப் பாவியான தன்னை கடவுள் மன்னித்து தடுத்தாட்கொண்டதை இன்றைய இரண்டாம் வாசகத்தின் வழியே விளக்குகிறார் பவுலடியார். இயேசுவிற்கு எதிராய் அவர் நடந்தாலும் கடவுள் தனக்காக மனமிரங்கியதை நினைவுகூர்ந்து பெருமிதத்துடன் விவரிக்கும் இவ்வாசகத்தை கனமுடன் கேட்போம்.

1) இரக்கத்தின் திருவுருவான அன்பு இறைவா, உமது நம்பிக்கைக்கு உரியவர்கள் எனக்கருதி உம் திருத்தொண்டிற்கு உம்மால் அமர்த்தப்பட்ட எம் திருத்தந்தை, ஆயர்கள், எம் பங்குத் தந்தையர் மற்றும் அருட்பணியாளர்கள் அனைவரும் உமது இரக்கத்தையும், மன்னிப்பின் மாண்பையும், உமது மனப்பக்குவத்தையும், அன்பையும் பெற்றுச் சாட்சிய வாழ்வு வாழத் தேவையான ஞானத்தைத் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2) தம்மை விட்டு விலகிப் போன ஒவ்வொரு ஆன்மாவையும் ஓய்வின்றி தேடும் ஒப்பற்ற இறைவா, தவறு செய்பவர்களுக்காக மோசேவைப் போல் மன்றாடவும், தூய பவுலைப் போல் நான் பாவிகளுள் முதன்மையான பாவி என்று எங்களையே தாழ்த்தி செபிக்கவும், செய்த தவறை உணர்ந்து திருந்தி வந்த இளைய மகனைப் போல் நாங்களும் எங்கள் தவறை உணர்ந்து உன்னிடம் திரும்பி வரவும் வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3) சினம் கொள்ளத் தாமதிப்பவராய், பேரன்பு மிக்கவராய் விளங்கும் அன்பு இறைவா, பாவத்தைக் குறித்து வருந்தி கலங்கி தன்னைத் தானே தாழ்த்தும் எந்த இதயத்தையும் நீர் ஒருநாளும் புறக்கணித்துத் தள்ளுவதில்லை என்ற விசுவாசத்தோடு நாங்கள் எங்கள் தவறுகளை உணர்ந்து, திருந்தி எம்மையே தாழ்த்தி வாழவும், அடுத்தவரை முழுமையாக மன்னித்து ஏற்றுக்கொள்வதில் உம்மைப் போல் இரக்கம் உள்ளவர்களாய் வாழவும், அதன் மூலம் விண்ணக மகிழ்ச்சியை இம்மண்ணகத்தில் மலரச் செய்யவும் வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4) உம்மை கூவி அழைக்கின்ற யாவருக்கும் மிகுந்த அருளன்பு காட்டுகின்ற அன்பு இறைவா, எங்கள் பங்கிலுள்ள அனைத்துக் குடும்பங்களையும் உம்மிடம் ஒப்படைக்கின்றோம். தேவையில் இருக்கும் எம் சகோதர சகோதரிகளுக்கு உதவிடவும், குடும்பங்களில் ஆரோக்கியமும், நட்புறவும், சமாதானமும், ஒற்றுமையும் ஓங்கி வளர்ந்திடவும், ஆலயப் பணிகளிலும், ஆன்மீகப் பணிகளிலும் எம் பங்குத் தந்தையுடன் இணைந்து பணியாற்றவும் வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

## திரு.வி.க.வின் கிறிஸ்துவின் அருள் வேட்டல்





**எங்கணும் சேவகர் எங்கணும் சேனைகள்**
**எங்கணும் போர்கள் எரி.**

எல்லா இடங்களிலும் வீரர்கள், எல்லா இடங்களிலும் போர் செய்யும் படைகள், எல்லா இடங்களிலும் சண்டைகள், எல்லா இடங்களிலும் அனல் வீசும் நெருப்பு மிகுந்துள்ளன.

சேவகர் – வீரர்கள், எங்கணும் – எல்லா இடங்களிலும், எரி – நெருப்பு



# திருச்சிலுவையின் மாட்சி விழா

**14-09-2022**

எண்.21:4-9, பிலி. 2:6-11, யோவா.3:13-17

## திருப்பலி முன்னுரை

சிலுவை அடையாளம் கடவுளின் அருளைப் பெற்றுத் தரும் என்ற நம்பிக்கை யுடன் வருகை தந்துள்ள அன்பு இறை மக்களே, உங்கள் அனைவரையும் திருச்சிலுவையின் மாட்சி விழா வழிபாட்டிற்கு அன்புடன் வரவேற்கிறேன்.

திருச்சிலுவை தியாகத்தின் சின்னம், மீட்பின் சின்னம். வெற்றியின் சின்னம். அத்தகைய சிலுவையை மாட்சிப்படுத்து வதன் மூலம் நிலை வாழ்வில் பங்கெடுத்து இறையனுபவம் பெற்றிட இன்றைய விழா நம்மை அழைக்கிறது. திருச்சிலுவை விழா, கடவுள் நமக்குச் செய்த வியத்தகு செயல்களை நன்றியோடு நினைத்துப் பார்க்கும் நன்றியின் விழா.

சிலுவை துன்பத்தின் சின்னம் என்று பயந்து ஓடாமல், அது மூவொரு இறைவனின் பிரசன்னம் என்பதை உணர்ந்து வாழ இன்றைய விழா நமக்கு அழைப்பு விடுக்கிறது. மூவொரு இறைவன் நம்மீது வைத்திருக்கின்ற அன்பு, இரக்கம் முதலான பண்புகளுக்கு சிலுவை சான்றாக அமைகிறது.

பாலை நிலத்தில் மோசேயால் வெண்கலப் பாம்பு உயர்த்தப்பட்ட நிகழ்ச்சி இயேசுவின் சிலுவை மரணத்துக்கு முன் அடையாள மாகும். வெண்கலப் பாம்பைக் கண்டோர் இவ்வுலக வாழ்வைப் பெற்றுக் கொண்டது போல, சிலுவையில் உயர்த்தப்பட்ட இறை மகனைக் கண்டுணர்வோர் மறுவுலக வாழ்வைப் பெற்றுக்கொள்வர். கடவுளின் ஒரே மகன்மீது நம்பிக்கை கொள்ளும்போது நாம் ஒளிமயமான நிலைவாழ்வை உரிமை யாக்கிக்கொள்ள முடியும் என்பதை இன்றைய வாசகங்கள் நமக்கு உணர்த்துகின்றன.

ஆணவம், அகங்காரம், சுயநலம், தற்புகழ்ச்சி, இறுமாப்பு போன்ற அழுக்கு களை கழுவி நம் அகம், புறங்களைச் சுத்தமாக்கி, தாழ்ச்சி என்ற ஆடை அணிந்து, சிலுவை அடையாளங்களைத் தரித்து, நமது கிறிஸ்தவ வாழ்விற்கான எல்லா நலன்களையும் திருச்சிலுவை வழியாக பெற்று மீட்பின் மக்களாய் வாழ இத்திருப்பலியில் இறையருளை வேண்டுவோம்.

## முதல் வாசக முன்னுரை

கடவுள் செய்த நன்மைகளை இஸ்ரயேல் மக்கள் மறந்தபோது கொள்ளிவாய் பாம்பு களால் கடிபட்டு சாக கடவுள் அனுமதிக் கிறார். அவர்கள் மனம் மாறி வருந்திய போது அவர்களை காப்பாற்றுகிறார் என்பதை இன்றைய முதல் வாசகம் விளக்குகிறது. சாவிலிருந்து மக்களைக் காப்பாற்ற மோசேயால் உயர்த்தப்பட்ட வெண்கலத்தினாலான பாம்பு கல்வாரியில் இயேசுவால் உயர்த்தப்பட்ட சிலுவைக்கு முன்னடையாளமாய் காட்டப்படுகின்ற இவ்வாசகத்தை கவனமுடன் கேட்போம்.

## இரண்டாம் வாசக முன்னுரை

அடிமைகளின் கொலைக் கருவியான சிலுவையில் ஆண்டவர் இயேசு மரித்து, உயர்த்தப்பட்டதால் அது ஆராதனைக்குரிய அரும்பொருளானது என்பதை இன்றைய இரண்டாம் வாசகம் விளக்குகிறது. நாம் இறைவனின் திட்டத்திற்கேற்ப வாழ்ந்தோ மென்றால் கடவுள் நம்மை அத்திருச் சிலுவையைப் போன்று மேலும் மேலும் உயர்த்துவார் என்பதை வலியுறுத்தும் இவ்வாசகத்தை கவனமுடன் கேட்பேம்.



# வத்திக்கான் செய்திகள்

போப் பிரான்சிஸ் அவர்கள் உங்கள் சேவையைப் பற்றி பெருமைப்படுங்கள் பலி பீடத்தில் பணிசெய்யும்போது உங்களின் சேவை ஒரு அப்போஸ்தலனுக்குரியதாகும். நீங்கள் பலிபீடத்தில் உங்கள் சேவையை மகிழ்ச்சியுடனும், கண்ணியத்துடனும், ஜெப மனப்பான்மையுடனும் மேற்கொண்டால், மற்ற இளைஞர்களுக்கும் தேவாலயத்தில் தங்களை அர்ப்பணிப்பதற்கான விருப்பத்தை நீங்கள் நிச்சயமாகத் தூண்டுவீர்கள் என்று தன்னை சந்திக்க வந்த பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த ஆயிரத்துக்கும் மேற்பட்ட பீடச் சிறுவர்களிடம் கூறினார்.

அன்னை மரியாளைப்போன்று இறைவார்த்தையின் பெண்களாய் இருக்க வேண்டும் என்று கனோசியன் சகோதரிகளுக்கு அறிவுறுத்தினார்.

குடும்பங்களையும், அதன் விசுவாசத்தையும் உயிர்போடு வைத்திருக்க தினமும் குடும்ப செபம் செய்வது மிக முக்கியமானதாகும். என்பதை பாப்ரசர் அவர்கள் கூறியுள்ளார்.

சமீபத்தில் பெய்த கடும் பருவ மழையாலும், அதனால் ஏற்பட்ட பெருவெள்ளத்தால் பாகிஸ்தான் சிந்து, பலுசிஸ்தான், மற்றும் தெற்கு பஞ்சாப் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். உணவு, உடை, தங்குமிடம் இல்லாமல் /எராளமான மக்கள் தவித்து வரும் இத்தருணத்தில், கராச்சியின் பேராயர் அவர்கள் உலக மக்களிடமிருந்து நிவரண உதவிகளைக் கேட்டுள்ளார்கள்.

பௌத்தர்கள் பெரும்பாலானவர்கள் வாழும் நாடு தாய்லாந்து. மற்ற மதத்தைச் சேர்ந்த வழிபாட்டுத் தலங்களை அந்த நாட்டு அரசாங்கம் அங்கீகரிப்பதில்லை. 1929 வரை அந்த நாட்டில் உள்ள 57 கத்தோலிக்க ஆலயங்களை மட்டுமே அங்கீகரித்திருந்தது. அதன்பிறகு 93 ஆண்டுகளுக்குப் பிறகு கடந்த ஆகஸ்ட் 23ம் தேதியன்று அந்நாட்டின் கலாச்சார அமைச்சகம் 9 வழிபாட்டுத் தலங்களை அங்கீகரித்துள்ளது. அவற்றில் 3 கத்தோலிக்க தேவாலயங்கள், மற்றவை புத்த ஆலயங்களாகும். இதை தாய் போஸ்ட் செய்தித்தாள் வெளியிட்டுள்ளது.

பிரேசில் நாட்டில் கத்தோலிக்கர்களும், பிராடஸ்டன்டுகளும் கலந்திருக்கின்றார்கள். ஆனால், சமீபத்தில் எடுக்கப்பட்ட ஆய்வின்படி வருகின்ற 2030ம் ஆண்டில் பிராடஸ்டன்டுகள் கத்தோலிக்கர்களைவிட அதிக எண்ணிக்கையில் இருப்பார்கள் என்று தெரிய வருகின்றது. சுவிசேஷ எழுச்சி அங்கு அதிக தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. அவர்கள் மக்கள் மத்தியில், முக்கியமாக கிராமப்புறங்களில் அவர்களின் பணி மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்திவருகின்றது. பெரும்பாலான கத்தோலிக்கர்கள் பிரிவினைச் சபைகளில் உறுப்பினர்களாக மாறிவருகின்றார்கள்.



# திருக்குறள் வழங்கும் சமூக நெறி



சிந்தனையாளர்
அருட்சகோதரி. **ஜெஸிந்தா ஜான்சன்** FSPM

## குறள் -10

**பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடிசேரா தார்**

### குறள் விளக்கம்

இறைவனுடைய திருவடிகளை பொருந்தி நினைக்கிறவர் பிறவியாகிய பெருங்கடலை கடக்க முடியும். மற்றவர் கடக்க முடியாது.

### சிந்தனை

'கடவுள் வாழ்த்து' என்ற அதிகாரத்தின் 10வது குறளை நாம் சிந்திக்கின்றோம். ஒரு சொற்பொழிவாளர் கூறிய கருத்து இது. திருவள்ளுவர் ஒரே கருத்தை 10 குறள்களில்; விளக்குகின்றார். கடவுளைப் பற்றி சொல்ல 10 குறள், கல்வியை பற்றி சொல்ல 10 குறள். அப்படியென்றால் நம் அனைவரையும் பற்றி அவர் சிறப்பாக அறிந்திருக்கின்றார் என்று எண்ணத் தோன்றுகின்றது. இந்த மனிதர்களுக்கு ஒரு கருத்தை ஒருமுறை சொன்னால் போதாது. அதை புரிந்து கொள்ள மாட்டார்கள் இவர்களிடம் 10 முறை சொன்னால் தான் மண்டையில் ஏறும் என்பதற்காகத் தான் ஒவ்வொரு தலைப்பிலும் 10 குறள்கள் கொடுத்திருக்கின்றாரோ என்று எண்ணத் தோன்றுகிறது.

10வது குறளில் இந்த வாழ்க்கை கடலைப் போன்றது. அதுவும் பெருங்கடல் என்று குறிப்பிடுகின்றார்; வள்ளுவர். கடல் என்று சொல்கின்றபோது அதன் ஒரு கரை மட்டுமே நமக்குத் தெரியும் மறுகரை நம் கண்களுக்கு புலப்படாது. இது தான் நமது வாழ்க்கை. நம் வாழ்க்கையில் இக்கரையாகிய பிறப்பு நமக்கு தெரியும். அக்கரையாகிய இறப்பு நமக்குத் தெரியாது. எனவே தான் இந்த வாழ்க்கையை பெருங்கடல் என்கிறார். ஒருவர் இந்த வாழ்க்கையில் சீரும் சிறப்புமாக வாழ்ந்து கரையை கடக்க வேண்டுமென்றால் அவர்களுக்கு கடவுள் நம்பிக்கை இருக்க வேண்டும். இறைவன் பாதம் பற்றி இருக்க வேண்டும். அப்படி பட்டவர்கள் தான் இந்த வாழ்க்கையை சீரும் சிறப்புமாக களிப்பர் என்பதை குறிப்பிடுகின்றார்.

இறைவன் பாதம் சேராதவர்கள் சீரும் சிறப்புமாக வாழ்க்கையை நடத்த முடியாது என்கிறார். இன்றைய நடைமுறை வாழ்க்கையில் இறைநம்பிக்கையாளர்கள் வாழ்க்கைக்கும், இறைநம்பிக்கை அற்றவர்களின் வாழ்க்கைக்கும் எத்தனை வித்தியாசம் இருக்கிறது அல்லவா?

பிறவிப் பெருங்கடலை கடக்க இறைநம்பிக்கை அவசியம் என சிந்திக்கும் போது, மாற்கு நற்செய்தி 6:47-51 வரையிலான இறைவார்த்தைகள் நினைவுக்கு வருகின்றன. பொழுது சாய்ந்த பிறகும் படகு நடுக்கடலில் இருந்தது. ஆனால் அவர் தனியே கரையில் இருந்தார். அப்போது எதிர்காற்று அடித்தது. சீடர்கள் தண்டு வலிக்கப் பெரிதும் வருந்துவதைக் கண்ட அவர் கடல்மீது நடந்து அவர்களை நோக்கி வந்தார். அவர்களைக் கடந்து செல்ல விரும்பினார். அப்போது ஏறக்குறைய நான்காம் காவல் வேளை. அவர் கடல்மீது நடப்பதைக் கண்டு அது பேய் என்று எண்ணி அவர்கள் அலறினார்கள். ஏனெனில் எல்லாருமே அவரைக் கண்டு அஞ்சிக் கலங்கினர். உடனே இயேசு அவர்களிடம் பேசினார். துணிவோடிருங்கள்: நான் தான், அஞ்சாதீர்கள் என்றார். பிறகு அவர்களோடு படகில் ஏறினார். காற்று அடங்கியது. அவர்கள் மிக மிக மலைத்துப் போயினர் .

சீடர்கள் பெருங்காற்றைக் கண்டு அஞ்சியபோது, அந்நேரத்தில் ஆண்டவர் கடல்மீது நடந்து அவர்களிடம் வந்தார். அவர் படகில் ஏறியதும் காற்று அடங்கியது. இயேசு தன் சீடர்களிடம் வந்ததும் அவர்கள் துன்பம் விலகியது. அவர்கள் பயணம் அமைதியில் தொடர்ந்தது. எனவே நம் வாழ்க்கை பயணத்தில் இறைவன் நம்மோடு இருப்பாரெனில் நம் வாழ்க்கை சீரும் சிறப்புமாக அமையும். நாமும் மகிழ்வோடு கடந்து செல்வோம். எனவே இறைவன் பாதத்தை பற்றிக் கொள்வோம்.



# இந்த வார திருப்பலி வாசகக் குறிப்புகள்

## பொதுக்காலம் 24-ம் ஞாயிறு - 11.09.22

**11.09.2022 – ஞாயிற்றுக்கிழமை**

முதல் வாசகம் : சவிடுதலைப் பயணம் 32:7-11, 13-14
இரண்டாம் வாசகம் : 1 திமொத்தேயு 1:12-17
நற்செய்தி : லூக்கா : லூக்கா 15:1-32

**12.09.2022 – திங்கட்கிழமை**

முதல் வாசகம் : 1 கொரிந்தியர் 11:17-26, 33
நற்செய்தி : லூக்கா 7:1-10

**13.09.2022 – செவ்வாய்கிழமை**

*புனித ஜான் கிறிஸோஸ்தோம்*

முதல் வாசகம் : 1 கொரிந்தியர் 12:12-14, 27-31
நற்செய்தி : லூக்கா 7:11-17

**14.09.2022 – புதன்கிழமை**

*திருச்சிலுவையின் மாண்பு திருவிழா*

முதல் வாசகம் : எண்ணிக்கை 21:25-31
இரண்டாம் வாசகம் : எண்ணிக்கை 2:6-11
நற்செய்தி : லூக்கா 6:20-26

**15.09.2022 – வியாழக்கிழமை**

*வியாகுல அன்னை திருவிழா*

முதல் வாசகம் : 1 கொரிந்தியர் 15:1-11
நற்செய்தி : லூக்கா : யோவான் 19:25-27

**16.09.2022 – வெள்ளிக்கிழமை**

**புனித கொர்னேலியஸ், புனித.சிப்ரியான்**

முதல் வாசகம் : 1 கொரிந்தியர் 15:12-20
நற்செய்தி : லூக்கா 8:1-3

**17.09.2022 – சனிக்கிழமை**

முதல் வாசகம் : 1 கொரிந்தியர் 15:35-37, 42-49
நற்செய்தி : லூக்கா 8:4-15



"Slowly the
foreign air
enter me.
I feel tingles
and sensations.
My life becomes
a fantasy.
Cannabis now
rules thee."


Jude the Apostle



# திருவிவிலியமும் திருக்குறளும்

## வழங்கும்

# ஆன்மீகச் சிந்தனை




**அறன்வரையான் அல்ல செயினும் பிறன்வரையாள்**
**பெண்மை நயவாமை நன்று.**

அதிகாரம் 15

பிறன் இல் விழையாமை

குறள் – 150

**பொருள்:** ஒருவன் அறநெறியில் நிற்காமல் அறம் இல்லாதவைகளை செய்தாலும், பிறனுக்கு உரியவளின் பெண்மையை விரும்பாமல் வாழ்தல் நல்லது என்கிறார் வள்ளுவர்.

என் இதயம் தீயது எதையும் நாடவிடாதேயும்; தீச்செயல்களை நான் செய்யவிடாதேயும்; தீச்செயல்; செய்யும் மனிதரோடு என்னைச் சேரவிடாதேயும்; அவர்களோடு இனிய விருந்தினை நான் உண்ணவிடாதேயும்.

(திருப்பாடல் 141:4)

மனிதர்கள் பலவீனர்கள்; தாம் செய்ய நினைப்பதை அல்லது நன்மையானதை செய்ய நினைத்தாலும் செய்ய இயல்வதில்லை. ஆனால் தீமையைச் செய்ய சூழ்நிலைகளும் மற்றவர்களும் ஏதுவாக அமைகின்றனர். அதனால் தான் ஒவ்வொருவரும் தன்னையும் தன் ஆன்மாவையும் தீயவற்றிலிருந்து காத்துக்கொள்ள இறைவனையேச் சார்ந்து வீடுபேறு அடைகின்றனர். இதை திருத்தூதர் பவுல் நமக்கு அழகாக எடுத்துரைக்கின்றார்.

நான் செய்வது என்னவென்று எனக்கே தெரிவதில்லை; எதைச் செய்ய விரும்புகிறேனோ அதை நான் செய்வதில்லை; எதை வெறுக்கிறேனோ அதையே செய்கிறேன்.

நான் விரும்பாததைச் செய்கிறேன் எனில் சட்டம் நல்லது என நான் ஏற்றுக் கொள்ளுகிறேன் என்றாகிறது.

ஆனால் அவ்வாறு செய்வது என்னுள் குடிகொண்டிருக்கும் பாவமே; நான் அல்ல.

ஏனெனில், என்னுள், அதாவது வலுவற்ற என் ஊனியல்பில், நல்லது எதுவும் குடிகொண்டிருக்கவில்லை என எனக்குத் தெரியும். நன்மை செய்யும் விருப்பம் என்னிடம் இல்லாமல் இல்லை; அதைச் செய்யத்தான் முடியவில்லை.

நான் விரும்பும் நன்மையைச் செய்வதில்லை; விரும்பாத தீமையையே செய்கிறேன்.

நான் விரும்பாததைச் செய்கிறேன் என்றால், அதை நானாகச் செய்யவில்லை; என்னில் குடிகொண்டிருக்கும் பாவமே செய்கிறது.

நான் நன்மை செய்ய விரும்பினாலும், என்னால் தீமையைத்தான் செய்ய முடிகிறது. இத்தகையதொரு செயல் முறையை என்னுள் காண்கிறேன்,

நான் கடவுளின் சட்டத்தைக்குறித்து உள்ளூர மகிழ்ச்சியடைகிறேன்.

ஆனால், என் உறுப்புகளில் வேறொரு சட்டத்தைக் காண்கிறேன்; என் மனம் ஏற்றுக்கொள்ளும் சட்டத்தை அது எதிர்த்துப் போராடுகிறது; என் உறுப்புகளில் இருக்கும் அந்தப் பாவச் சட்டத்திற்கு என்னைக் கட்டுப்படுத்துகிறது.

அந்தோ! இரங்கத்தக்க மனிதன் நான்! சாவுக்குள்ளாக்கும் இந்த உடலினின்று என்னை விடுவிப்பவர் யார்?

உரோமையர் 7: 15-24. என்று மக்கள் அனைவரின் உள்ளத்திலிருக்கும் வினாவை அவரே எழுப்பி அதற்கான விடையையும் இயம்புகின்றார்.

'நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் வழியாய்க் கடவுள்தாம் விடுவிப்பார்; 'அவருக்கு நன்றி!

(உரோமையர் 7:25) என்கிறார் பவுல்.

கடவுளை சாராதவர்களுக்கு தீய செயல்கள் பெருகும். அப்படியே பெருகினாலும் பிறன் மனைவியை தொடாமல் இருப்பது, அவளை சேராமல் இருப்பது நல்லது என்கிறார் வள்ளுவர்.

ஆபிரகாம் வாழ்ந்த நாட்டில் பஞ்சம் ஏற்பட்டதால் எகிப்திற்கு செல்கிறார். எகிப்து தேசம் முழுவதும் பல தெய்வங்களை வழிபடும் தேசமாக இருந்தது. பல

சமய சடங்குகள், பலி கொடுக்கும் சடங்குகள், உள்ளிட்ட சமயங்களும் இருந்தன இறப்பிற்கு பிறகு வாழ்வு உண்டு என்பதை அவர்கள் அறிந்திருந்தனர். அதனால் ஒரு ஒரு மனிதன் இறந்து போனால் அவன் இதயத்தை தவிர்த்து மற்ற அனைத்து உறுப்புகளையும் நீக்கிவிட்டு பதப்படுத்தி வைப்பர்.. லெனின் துணியை கொண்டு உடலை சுற்றி கட்பெட்டியில் அல்லது மரத்தாலான சவப்பெட்டியில் வைத்தனர். இவற்றில் மறு உலகிற்குத் தேவையான உணவு, உடை, பிற பொருட்களை பாதுகாப்பாக வைப்பர். ஒரு சில உறுப்புகளை மட்டும் தனியாக பாதுகாக்கும் பழக்கம் அவர்களிடம் இருக்கும். ஒழுக்க விதிமுறைகள் எல்லாம் அவர்களுடைய மனித எண்ணங்களுக்கு ஏற்றபடி அமையும். ஆண்டவராகிய கடவுளைப் பற்றி சிறிதும் அறியாதவர்கள். இந்நிலையில் ஆபிரகாம் சாராவை அழைத்துக்கொண்டு எகிப்து செல்கிறார் என்பதை தொடக்க நூல் 12 ஆம் அதிகாரம் இறைவசனம் 10 முதல் வாசிக்கிறோம்.

அப்பொழுது அந்நாட்டில் உணவுப் பஞ்சம் ஏற்பட்டது. பஞ்சம் கடுமையாக இருந்ததால், ஆபிராம் தாம் தங்கி வாழ்வதற்கு எகிப்து நாட்டிற்குச் சென்றார்.

அவர் எகிப்தை நெருங்கிய பொழுது தம் மனைவி சாராயிடம், 'நீ கண்ணுக்கு அழகானவள் என்பது எனக்குத் தெரியும்.

எகிப்தியர் உன்னைக் காணும்பொழுது 'இவள் அவனுடைய மனைவி' எனச்சொல்லி என்னைக் கொன்று விடுவர்; உன்னையோ உயிரோடு விட்டுவிடுவர்.உன் பொருட்டு எனக்கு நல்லது நடக்கவும் உன்னால் என் உயிர் காப்பாற்றப்படவும் நீ என் சகோதரி எனச் சொல்லி விடு' என்றார்.

ஆபிராம் எகிப்தைச் சென்றடைந்தபொழுது, சாராய் மிகவும் அழகானவராக இருப்பதை எகிப்தியர் கண்டனர்.

பார்வோனின் மேலதிகாரிகள் அவரைக் கண்டு அவரைப்பற்றிப் புகழ்ந்தனர். ஆகவே, அவர் பார்வோனின் அரண்மனைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

அவர் பொருட்டு ஆபிராமுக்குப் பார்வோன் நன்மை செய்தான்; ஆடு மாடுகளையும் கழுதைகளையும், வேலைக்காரரையும், வேலைக்காரிகளையும், பெண் கழுதைகளையும் ஒட்டகங்களையும் அவருக்குக் கொடுத்தான்.

ஆனால் ஆண்டவர் ஆபிராமின் மனைவி சாராய்க்கு நேரிட்டதை முன்னிட்டுப் பார்வோனையும் அவன் குடும்பத்தாரையும் கொடிய கொள்ளை நோய்களால் துன்பப்படுத்தினார்.

பார்வோன் ஆபிராமை அழைத்து அவரிடம், 'நீ எனக்கு இப்படிச் செய்து விட்டாயே! அவள் உன் மனைவி என்று ஏன் என்னிடம் சொல்லவில்லை?

அவள் உன் சகோதரி என்று நீ ஏன் சொன்னாய்? அதனால்தான் நான் அவளை என் மனைவியாக எடுத்துக் கொண்டேன்! இப்பொழுதே, உன் மனைவியைக் கூட்டிக்கொண்டு புறப்படு' என்றான்.

(தொடக்கநூல் 12:10-20)

அதுமட்டுமல்லாமல், ஆபிராமிற்குரிய அனைத்தையும் தான் அபகரிக்காமல், கொடுத்தனுப்புகிறான் என்பதை அடுத்துவரும் வசனம் நமக்கு தெளிவுபடுத்துகிறது.

'பின் பார்வோன் தன் ஆள்களுக்குக் கட்டளையிட அவர்கள் அவரை அவர் மனைவியுடனும் அவருக்குரிய எல்லாவற்றுடனும் அனுப்பிவிட்டனர்.'

(தொடக்கநூல் 12:20)

பொதுவாக அரசனுக்கு எதையும் செய்ய உரிமை உண்டு. எந்த குற்றங்களையும் அவன் எளிதாக செய்ய முடியும். அவனைக் கண்டிக்கவோ அல்லது தண்டிக்கவோ அல்லது ஏன் என்று கேட்பதற்கு கூட எவரும் துணிவதில்லை. இருந்தபோதிலும் அவன் ஆபிரகாமின் மனைவி சாராவை மனைவியாக ஏற்றுக் கொள்ளவில்லை. அவள் ஆபிரகாமின் சகோதரி அல்ல; மனைவி என்பதை அறிந்த பின்னர் அவளை அவனிடமே ஒப்படைத்து விடுகிறான். இது கடவுளின் பார்வைக்கு நல்லதென அறியப்பட்டதால், அரசனும், மக்களும் அழிவிலிருந்து காப்பாற்றப் பட்டனர்.

' தன் மனைவி தனக்கே உரியவள் என்னும் உணர்ச்சி ஒரு கணவனிடம் சினவெறியை உண்டாக்கும்; பழி தீர்த்துக்கொள்ள வாய்ப்புக் கிடைக்கும் நாளில், அவன் இரக்கம் காட்டமாட்டான்;'

(நீதிமொழிகள் 6:34)

இவற்றையெல்லாம் மனதில் கொண்டு, அவரவர் வாழ்வில், அவரவர் மனநிறைவுடன் வாழ பழகவேண்டும். இயலாதவை இருப்பின் கடவுளையே சாரும். நீதி வழங்கும் கடவுள் நீதிபதியாக நின்று நலமானதை நல்குவார்.

*இயேசுவுக்கே புகழ்*

**- லீமா விக்டோரியா**